சிறப்பு இதழ்

# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 32 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 32

## கோவிட்-19 க்கு நடுவில் நிலையானது

கோவிட்–19 என்று சொல்லப்படுகிறதான கொரொனா வைரஸ் நோய்தொற்றானது நவம்பர் 2019 ல் சீனா தேசத்தின் வூகான் மாகாணத்தில் முதன்முதலாக பரவ ஆரம்பித்தது.அந்த நாள் தொடங்கி இன்று வரை உலகம் முழுவதிலும் பரவி அநேக ஜனங்களை பாதிப்பிற்குள்ளாக்கி கொண்டிருக்கிறது. இந்த இதழை எழுதிக் கொண்டிருக்கும்போதே, ஆயிரக்கணக்கான நோயாளிகள் நோய் அறிகுறியுடன் உறுதி செய்யப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டும், சிகிச்சையளிக்கப்பட்டும் வருகின்றனர். மேலும் ஆயிரக்கணக்கான மரணங்களும் நாள்தோறும் உலகமெங்கும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. இதனால் நாளுக்கு நாள் இறப்புவிகிதம் அதிகமாகும் என அஞ்சப்படுகிறது.

இந்த வைரஸ் தாக்கத்தினை கட்டுக்குள் கொண்டு வரவே உலகமெங்குமுள்ள பல அரசாங்கத்தினர் தன் நாட்டு மக்களைக் காப்பாற்ற வியாபாரம்,தொழில் முடக்கப்பட்டும், கடைகள் அடைக்கப்பட்டும் பொதுக்கூட்டங்களை நடத்த தடைசெய்தும் உத்தரவிடப் பட்டுள்ளது. அவசியமான தேவைகளுக்கும் உணவுத்தேவைகளுக்காகவுமே தவிர வேறு எந்த காரியத்திற்கும் வீட்டை விட்டு யாரும் வெளியே வரக்கூடாது என்று ஒவ்வொரு நாடும் தன் குடிமக்களை எச்சரித்துக் கொண்டே இருக்கிறது. இதன் நிமித்தம் உலகப் பொருளாதாரம் மிக மிக மோசமான நிலையில் சரியத் தொடங்கி இருக்கிறது. பலர் தங்களுடைய வேலையை இழந்து வாழ்வாதாரத்தை தொலைத்து நின்று கொண்டிருக்கிறார்கள். சமூக இடைவெளியை கடைபிடிக்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் கிறிஸ்தவ ஆலயங்களும் சபைகளும் இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் மூடப்பட்டுள்ளது. பல வழிகளில் மாற்றங்களை நம் வாழ்க்கை கற்றுத் தந்திருக்கிறது.



சகோ :
மைக்கேல் ஸ்மித்

இந்த நாட்கள் பல கேள்விகளையும் பயத்தையும் நமக்குள் கொண்டு வருகிறதாய் அமைந்துவிட்டது. பொதுவாக வாழ்க்கை என்பது பல காரியங்களை கொண்டது. ஆனால் இக்கட்டான இந்த மாற்றங்களினால் நம்மை சுற்றி உள்ள உலக ஜனங்கள் ஒவ்வொரு வருக்குள்ளும் வாழ்வு மரணம் ஆரோக்கியம் வழிபாடு உறவுகள் வேலைகள் பணி ஓய்வு ஆகாரம் தண்ணீர் இது போன்ற ஒரு சில காரியங்கள் மாத்திரமே சிந்தனையில் ஓடிக்கொண்டிருக்கிறது.வாழ்வில் ஒவ்வொரு செயல்களும் ஒரு பகுதியே. ஆனால் இந்த துயரமான இடையூறான காலத்தில் மாறாமல் இருப்பது ஒன்று மட்டுமே– கர்த்தர். நான் கர்த்தர் நான் மாறாதவர் மல்கியா 3:6




ஜனங்கள் மேல் அவர் கொண்ட அன்பும் அக்கறையும் ஒரு நாளும் மாறாது .சோதனை நேரத்தில் அவரை புகலிடமாகவும் பசியாய் இருக்கும் போது நம்மைப் போஷிக்கிறவராகவும் இருக்கிறார்.நம்மில் பலர் நம்பிக்கை இழந்து பயத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். “ பரதேசியாய் நாம் சஞ்சரித்துக் கொண்டிருக்கிற நிலையற்ற இந்த உலக வாழ்வில் அனுதினமும் மாறாத சமாதானத்தையும் ஆவிக்குரிய ஜெயத்தையும் தருகிற கர்த்தரையே நோக்கிப் பார்ப்போம். ஒரு பாடல் ஆசிரியர் எழுதிய வரிகள் “ கர்த்தர் சொல்லுகிறார் நீங்கள் கர்த்தருக்காய் உருவாகப் போகிறீர்கள் ”

### ஐந்தையும் செய்யுங்கள்



### கொரொனாவை தடுத்து நிறுத்துங்கள்

| | |
|---|---|
| 1. கைகள் | அடிக்கடி கழுவவும் |
| 2. முழங்கை | இருமலுக்கு உபயோகிக்க |
| 3. முகம் | தொடாதிருங்கள் |
| 4. இடைவெளி | கடைபிடியுங்கள் |
| 5. வீடு | தரித்திருங்கள் |

உலக சுகாதார நிறுவனம்

நற்குடிமைத்துவம் 2
ஆசிரியரின் தலையங்கம் 3
வாக்குத்தத்தத்தை சார்ந்திருப்போம்; தொற்றுநோய் குறித்து; இதுபோன்ற நேரங்களில் 4
எழும்பி ஜெபிப்பேம் 5
நம் விசுவாசம் எங்கே? கடினமான அனுபவங்கள் 6
பேரிடர் நெருக்கம் சுற்றி நிற்கும் பயங்கரம்
பூமிக்கு உப்பு 7
இடைவெளி/ இணைப்பு
சுருட்டப்பட்ட சீலைகள் 8

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17; 2 பேது 1 : 20-21; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19; 17 : 30; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ;19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3 : 28; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

# நற்குடிமைத்துவம்

## தேவனுடைய உதாரணம்

வைரஸ் வேகமாக பரவி கொண்டிருக்கிற இந்த நிலையற்ற காலகட்டத்தில் ஜனங்கள் யாரும் ஒன்று கூடுவதற்கு அனுமதி இல்லை என்பதே இன்றைய பல நாடுகளின் வேண்டுகோளாக இருக்கிறது .கிறிஸ்தவர்களாகிய நம் மத்தியில் இந்த வேண்டுகோள் விவாதம் ஆகியிருக்கிறது. என்னவெனில் கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த வழிமுறைகளை பின்பற்றி ஆலயங்களையும் சபைகளையும் சபைக்கூட்டத்தையும் புறக்கணிக்கலாமா? ஆகவே மனுஷனுடைய கட்டளையை மீறி ஆலயங்களில் வழிபாடு செய்யலாமா? இவ்விதமாக நாம் சட்டத்தை மீறி அரசாங்கத்தை எதிர்த்து ஆலயங்களிலே கூடி வருவதால் மற்றவர்களுக்கும் அண்டை வீட்டாருக்கும் நாம் சொல்லும் செய்தி என்ன? இது தேவ அர்ப்பணிப்பை காட்டுகிறதா? அல்லது பிடிவாதமான எதிர்ப்பினை காட்டுகிறதா? இன்னொரு பக்கம் பேதுரு அப்போஸ்தலன் பிரதான ஆசாரியனால் போதகம் பண்ண கூடாது என்று உறுதியான கட்டளையை பெற்றிருந்தபோது, பேதுரு பிரதியுத்தரமாக மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (அப்போ 5: 29) என்றார். எபிரேயர் 10 :25இல் சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. மறுபுறம் இயேசுவின் போதனைகள் யாவுமே அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்பட்டிருக்கவே வற்புறுத்தி சொல்லப்பட்டுள்ளது.மேலும் பவுல் ரோமர் 13: 1 லே எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால் தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.

வேதம் நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது யாதெனில் கிறிஸ்தவர்களாகிய நாம் நம் தேசத்தின் நற்குடிமக்களாக விளங்கும் பொருட்டு அரசாங்கத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். தனிப்பட்ட உங்கள் கருத்தில் நீங்கள் வேறுபடலாம். ஆனால் உண்மையாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட கூடாது என்ற நோக்கத்தோடு கிறிஸ்தவர்களை தடை செய்தால் பேதுருவின் நாட்களில் நடந்தது போல மனப்பூர்வமாக அரசாங்க திட்டங்களை முறியடிப்போம். ஆனால் இப்போது நிலைமை அப்படி இல்லை. பல நாடுகளில் நகரங்களில் மற்றும் கிராமங்களில் சிறிது காலத்திற்கு ஆலயங்கள் மூடப்பட்டிருக்கிறது. ஏனெனில் அனைத்து குடிமக்களும் நம் சகோதர சகோதரிகள். ஆகவே அவர்களை நேசித்து வைரஸ் பரவாமல் தடுக்க நம்மால் இயன்ற பொது ஊரடங்கினை பின்பற்றுவோம்.

தற்காலிகமாக வீடுகளில் அடைபட்டிருக்கிற நாம் இந்த துயரமான நாட்களில் சோசியல் மீடியா, டிவி மற்றும் மொபைல் மூலம் ஏறெடுக்கப்படும் ஆராதனைகளில் பங்கு பெற பார்க்க வழி உண்டு. 1பேதுரு 2 : 13- 17 ல் பேதுரு சுருக்கமாக கூறியிருக்கிறார். நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரம் உள்ள ராஜாவுக் கானாலுஞ்சரி... நீங்கள் நன்மை செய்கிறதினிமித்தம் புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ள வர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தை துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல் தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். எல்லாரையும் கனம் பண்ணுங்கள். சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள். தேவனுக்கு பயந்திருங்கள்.ராஜாவைக் கனம் பண்ணுங்கள்.


*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*



**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

சிறப்பு இதழ்

# ஆசிரியரின் தலையங்கம்

உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் – ரோமர் 8 :35 – 39.

எந்த ஒரு தீமையான காரியம் இயேசுவின் அன்பை விட்டு நம்மை பிரிக்க முடியாது என்பதற்கான ஆழமான நிச்சயத்தை நமக்கு கர்த்தர் தந்திருக்கிறார். கடினமான நேரங்களை எதிர் கொள்ளும் சூழ்நிலை நேரிடும். ஆனாலும் எந்த ஒரு வைரசோ, வேலை இழப்பு அல்லது அந்தகார வல்லமையோ தேவ பிள்ளைகளின் இரட்சிப்பை பறிக்க இயலாது. இந்த மாதத்தில் சற்று மாறுபட்ட இந்தக் கொரொனா வைரஸ் கொள்ளை நோய் குறித்த சிறப்பிதழை வெளியிட கர்த்தர் கிருபை செய்தார்.கோவிட்– 19 தொற்றுநோய் அபாயத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் உலக ஜனங்களும் தேவனுடைய பரிசுத்தவான்களும் பல நிச்சயமற்ற காரியங்களில் கலங்கிக் கொண்டிருக்கின்றனர்

உலகமே பயத்திலும் கேள்விக்குறியோடும் ஸ்தம்பித்து நின்று கொண்டிருக்கும் இந்த நாட்களில், தேவ பிள்ளைகளாகிய நாம் அமைதலுள்ள ஜீவனம் பண்ணி, கிறிஸ்துவுக்குள் சமாதானமாய் இருக்கிறோம். இந்த கொள்ளை நோய் வாதை எதனால் ஏற்பட்டது? என்ன நோக்கம்? என்றெல்லாம் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு பதில், தேவன் மனுக்குலத்தின் மீட்பிற்காக கிரியை செய்து கொண்டிருக்கிறார். இந்த சிறப்பு இதழ் பரிசுத்தவான்களைத் தெளிவுபடுத்தவும், உலகின் பல்வேறு தேவ சபை ஊழியர்கள் எழுதிய பல கட்டுரைகளை உள்ளடக்கியது. தேவபிள்ளைகளுக்கு இந்த இதழ் ஆசீர்வாதமாகவும் உற்சாகமூட்டுவதாகவும் அமையும் என்று விசுவாசத்தோடு எதிர்பார்க்கிறேன் .

சில ஜனங்களுக்கு நடந்து கொண்டிருக்கும் காரியங்கள் பயத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கும் போது தேவனோடு நடக்கும் நமக்கு தேவ சமாதானத்தை அருளி அவர் நம் வாழ்வை நடத்துவார் என்று உங்கள் விசுவாசத்தை தேவன் பேரில் வைக்கும் படியாக நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வாழ்வா சாவா என்கிற போராட்டமான சூழ்நிலையின் மத்தியில் தேவன் தரும் ஆச்சரியமான அனுபவமே சமாதானம். நீங்கள் இரட்சிக்கப்படா விட்டால் இதுதான் சரியான தருணம். மனம் திருந்தி பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் பயத்தோடு இருந்தால் ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்.தேவன் உங்கள்மேல் வைத்திருக்கிற அன்பு அளவற்றது. புயல் போன்ற துன்பங்கள் உங்கள் வாழ்வில் சூழ்ந்து வந்தாலும் பரிசுத்த ஆவியானவரால் மாத்திரமே உங்களை தேற்றி அரவணைக்க முடியும்.
நாம் வாழும் இந்த சமுதாயம் இந்த வைரசை கண்டு பயந்து நடுங்க தேவை இல்லை அதே சமயம் அதன் விளைவையும் தாக்கத்தையும் உதாசீனப்படுத்துவதும் தவறு. எல்லா ஜனங்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படவும் இந்த துயரம் எல்லாம் சந்தோசமாக மாறவும் நாம் அனைவரும் ஜெபிப்போம்.

ஒருவருக்காய் ஒருவர் ஜெபம்பண்ணி தேவனிடத்தில் நெருங்கி சேர்வோம். தேவனுடைய சபையின் விசுவாசத் தூண்களாய் வளர்வோம். இந்த கடினமான நேரத்தில் இயேசுவின் போர்வீரர்களாய் எழும்புவோம். கர்த்தர்தாமே எல்லா சகோதர சகோதரிகளையும் ஆசீர்வதிப்பாராக.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**

**ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை, அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார், அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? மத்தேயு 6:26**



## தொற்றுநோய் குறித்த பகிர்வு

### சகோ.சின்வெண்டு  வாட்ச்கு (நைஜீரியா)



திடீரென்று இந்த உலகம் இன்னொரு ஆட்கொல்லி நோய்க்கு ஆளாகி இருக்கிறது. கர்த்தருடைய இரக்கம் மனுஷருக்கு கிடைக்காவிட்டால் அநேக ஆத்துமாக்களை இந்த நோய்க்கு இழக்க நேரிடும். இது மாதிரியான நெருக்கடியான சூழலில் தேவ பிள்ளைகளாகிய நாம் தேவனிடத்தில் கருத்தாய் பாரத்தோடு ஜெபிக்க வேண்டும்

இந்த நோய் தோன்றிய இடம், அது தோற்றுவிக்கப்பட்டதா அல்லது இயற்கையாக தோன்றியதா என்றெல்லாம் நமக்குள் சிந்தனை எழுகின்ற அதேசமயம் ஒன்று மட்டும் நிச்சயம். இதை கர்த்தர் அனுமதித்திருக்கிறார் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு இந்த நோய் தீவிரம் ஆவதற்கு முன்பு என்னுடைய மனதில் தோன்றிய வசனம் எசே 14: 12 - 20 கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர் மனுபுத்திரனே ஒரு தேசம் எனக்கு விரோதமாய் துரோகம் பண்ணிக் கொண்டே இருந்து, பாவம் செய்தால் , நான் அதற்கு விரோதமாக என் கையை நீட்டி, அதில் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்து அதில் பஞ்சத்தை அனுப்பி மனிதரையும் மிருகங்களையும் அதில் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன். நோவாவும், தானியேலும், யோபும் அதின் நடுவில் இருந்தாலும் அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களே அல்லாமல் அவர்கள் குமாரனையாகிலும் குமாரத்தியையாகிலும் தப்புவிக்க மாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்

இது என்னுடைய இதயத்தில் தேவனுடைய இரக்கத்தை வேண்டும்படியாக தோன்றியது. இந்த நோய் பரவலின் தீவிரமும் அதை கட்டுப்படுத்த முடியாத நிலையும் மனுஷனுடைய இயலாமையை காட்டுகிறது. நோய்ப்பரவலை கண்டு அஞ்ச வேண்டிய சூழ்நிலை. லூக்கா 21 : 25 -28 லே மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே கர்த்தர் நமக்கு இரங்கும்படி மன்றாடுவோம்.

## வாக்குத்தத்தத்தை சார்ந்திருங்கள்

### போதகர். வலேரி கிளாஸ் ( ஜெர்மனி )



இந்த முழு உலகமும் வைரஸ் பீதியினால் கலக்கமுற்று மரணபயத்தோடு நின்றுகொண்டிருக்கும் சூழ்நிலையில், தேவனே அவருடைய பிள்ளைகளுக்கும் சுத்த இருதயம் உள்ளோருக்கும் என்றும் பலன்.

என் மாம்சமும் என் இருதயமும்  மாண்டு போகிறது.தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார். எனக்கோ தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம். கர்த்தராகிய ஆண்டவர் மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். சங்கீதம் 73 : 26 , 28 சங்கீதம் 91 ல் சொல்லப்பட்டுள்ள அநேக வாக்குத்தத்தங்கள் இந்த சோதனை காலத்தில் நம்மை தேற்றும் .தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றி கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள்

நம் தேசத்தின் மேல் வெட்டுக்கிளிகளை அனுப்பும் போதும் கொள்ளை நோய் பரவும் போதும் தேவனே நம் புகலிடம். அவருடைய வசனமே அடைக்கலம். எங்களால் மகிமை உண்டாகும்படி தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறதே. (2 கொரிந்தியர் 1:20) தேவனுக்கு மகிமை உண்டாகட்டும்

நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர் என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கி காத்து இரட்சணிய பாடல்கள் என்னை சூழ்ந்து கொள்ளும் படி செய்வீர் - சங்கீதம் 32:7. தேவனை சார்ந்து அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தேவன் தாமே தைரியத்தால் உங்களை நிரப்பி பாதுகாப்பாராக.

நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்- ஆபகூக் 3:18

## இம்மாதிரி சமயங்களில்

### சுவி. பர்த் வாட்ச்க்கு ( நைஜீரியா )



எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் உன் காலைத் தள்ளாடவொட்டார் உன்னைக் காக்கிறவர் உறங்கார் (சங்கீதம் 121 : 1-3)

இஸ்ரவேல் ஜனங்கள் கொள்ளிவாய் சர்ப்பங்களால் தண்டிக்கப்பட்ட போது சர்ப்பங்கள் அவர்களை விட்டு நீங்கும்படி மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் .

அப்பொழுது கர்த்தர் நீ ஒரு கொள்ளிவாய் சர்ப்பத்தின் உருவத்தை செய்து அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வை;கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கி பார்த்தால் பிழைப்பான் என்றார் (எண்ணாகமம் 21 :8). இயேசு கிறிஸ்துவும் கூட இதே உதாரணத்தை நமக்கு முன் வைத்து தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும் (யோவான் 3:14-15) என்கிறார்.

நமக்கு ஒரு தகப்பன் இருக்கிறார் .நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் நேசிக்கிறவர். தேவனுடைய பரிசுத்தவான்களே உங்கள் கைகளை தேவனுக்கு நேராய் உயர்த்தி விண்ணப்பம் பண்ணுங்கள்

# எழும்பி ஜெபிப்போம்



### சுவி.பீட்டர் அக்வேயோனா (கென்யா)

கென்யா முழுவதிலுமுள்ள ஜனங்கள் அடுத்து என்ன நடக்குமோ என்கிற பெரிய பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர் அன்றாட வாழ்வு முடக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய் பரவுவதை தடுக்கும் நடவடிக்கையாக ஆலய ஆராதனைகளும் கூட தடை செய்யப்பட்டுள்ளது. இந்த வைரஸ் அச்சத்தினால் ஏழையும் பணக்காரனும் மனந்திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தேவனுடைய பரிசுத்தவான்கள் உலகம் முழுவதிலும் பயமின்றி எழுந்து ஜெபித்துக் கொண்டிருக்கின்றனர். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் சாத்தானின் கிரியைகள் ஒழிக்கப்பட்டு நாம் சுகமாவோம் .வேத வசனமே நம்மை இன்று தேற்றுகிறது. உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையை பிடித்து பயப்படாதே நான் உனக்கு துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன் (ஏசாயா 41 : 3)

இந்த வியாதியும் மரணமும் தெய்வீக சுகமாக்குதலினிமித்தமே சுகமடையும்.இப்போது நம் தேவசபையானது விரைந்து செயல்பட்டு உலகமெங்குமுள்ள பரிசுத்தவான்களை ஜெபிக்கத் தூண்டுகிறது.தேவன் இந்த பேரழிவிலிருந்து மனிதனை மீட்கும் திட்டத்தை அவர் ஏற்கனவே முன் குறித்திருப்பதால் பரிசுத்தவான்கள் யாரும் பயப்படத் தேவையில்லை.

அப்போஸ்தலர் 27:22 லே கடலில் பெருங் காற்று வீசியபோது பவுல் திடமனதாயிருங்கள் என்று இப்பொழுது உங்களுக்கு தைரியம் சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராண சேதம் வராது என்று தைரியப்படுத்தினார்.இன்று பல நாடுகளில் அநேக உயிர் சேதங்கள் கடந்த நாட்களில் நடந்து விட்டது. அந்த மரணத்திற்கு பின்பும் ஒரு வாழ்வு நமக்கு உண்டு. கர்த்தர் தாமே தம்முடைய பரிசுத்தவான்களையும் சுவிசேஷ பணிவிடைகாரர்களையும், இந்த உலகம் முழுவதையும் ஆசீர்வதிப்பாராக. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் ஆமென்.

**நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக்கொடுப்பேன்.**
**2 நாளாகமம் 7:13-14**

### சகோ.சகோசத் பாபர் ( பாகிஸ்தான்)



2 நாளாகமம் 7:14 வசனமே பரிசுத்த ஆவியானவர் எனக்கு நினைவு படுத்துகிறார். நாம் உபவாசித்து ஜெபிக்க வேண்டிய தருணமிது .அதுவே நம் ஆயுதம். நாம் பயமின்றி விசுவாசத்தோடு தேவனுடைய வசனத்திற்கு கீழ்படிவோம்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை காத்துக் கொள்ளும் படியாக ஜெபிப்போம். இயேசுவின் நாமத்தினாலே பாதுகாக்கப்படுவோம். ஆமென்.தேவ சபையின் அனைத்து பரிசுத்தவான்களுக்கும் வாழ்த்துதல்களை சொல்லுகிறேன். கர்த்தர் உங்களை எல்லாக் காலங்களிலும், ஆசீர்வதித்து, உங்கள் தேவைகளை அற்புதமாகச் சந்தித்து வழிநடத்துவாராக

### சகோ.மாஸ்டர் கஸ்டர்( மாலவி)



கோவிட்-19 வைரசால் பாதிக்கப்பட்ட தேசங்களுக்காக இக்கடிதத்தை எழுதுகிறேன். கிறிஸ்தவர்களாகிய நாம் 2 நாளாகமம் 7: 13-14 ல் சொல்லப்பட்டுள்ள வசனத்தின் படி ஜெபிக்க வேண்டும். இந்த கடைசி காலங்களில் நாம் சோர்ந்து போகக்கூடாது.

கர்த்தர் நமக்காய் யுத்தம் செய்வார். தாவீது தேவனை சார்ந்து இருந்தது நிமித்தமே யுத்தத்தில் கோலியாத்தை வெல்ல முடிந்தது. மனிதர்களாகிய நம்மால் கூடாது. ஆனால் எல்லாவற்றையும் செய்ய அவரால் கூடும். தயவுசெய்து உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் இந்த கொரோனா வைரசுக்காக ஒருமனப்பட்டு ஜெபியுங்கள். கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதில் தருவார். தேவன் நம் தேசங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

# நம் விசுவாசம் எங்கே

## போதகர் : இவன் எக் (கன்சாஸ் , அமெரிக்கா)



நாம் இன்று சந்தித்து வரும் உலகளாவிய இந்த தொற்றைக் குறித்து பலருக்குள் எழும் கேள்விகள் நாம் அறிந்ததே. நம் சரீரத்தைப் பேணிப் பாதுகாக்க மிக உயரிய சுகாதாரத்தை கவனமாக கையாள பழக்கப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய ஆவியையும் தேவன் ஒரு நாளும் சோர்ந்து போகவும் வேதனை அடையவும் விடமாட்டார்.

ஆகவே இந்த நிச்சயமற்ற சூழ்நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன? பயப்படும் காரியங்கள் ஏற்படும் போது நாம் என்ன செய்ய வேண்டும் என்று வேதம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது? ஆம்.பரலோக தேவன் பேரில் நம்பிக்கையாய் இருக்க கற்றுக் கொள்வோம். நம்முடைய பழைய ஏற்பாட்டு ஜனங்களை கர்த்தர் நடத்தி வந்த விதம், அவருடைய கிருபை அளவற்றது. இன்றும் நாம் அதனை நினைத்து தைரியமாய் இருப்போம்.

எபிரேயர் 12ம் அதிகாரத்தில் சில நல்ல ஆலோசனைகளை காண முடிகிறது. பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட வேண்டும். இதுவே நாம் ஆவிக்குரிய ஜெயத்தை அடைய வழி. நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாய் ஓடக் கடவோம். நம் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய கிறிஸ்துவிலே விசுவாசமாயி ருப்போம். இந்த சோதனையின் வழியே நாம் கடந்து போகும் போது தான் நம்முடைய ஆவியிலே புது உற்சாகத்தை அடைய முடியும் சங்கீதக்காரர் இவ்வாறு குறிப்பிடுகிறார் நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன் – சங்கீதம் 56:3.

மேலும் என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே உன்னுடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று – சங்கீதம் 27: 8.

பரிசுத்தவான்களே தைரியமாய் இருங்கள். உற்சாகம் அடையுங்கள். என் மீட்பர் உயிரோடு இருக்கிறார். செங்கடல் நடுவே வழி உண்டாக்கிய தேவனவர்! குருடனுக்கு பார்வை கொடுத்தது அவருடைய கிருபையே! முடவனை அவரே நடக்க செய்தவர்! மரித்தவனை அவருடைய மாபெரும் வல்லமையால் உயிரோடு எழுப்பினார்! இரைகின்ற கடலை அமைதிப்படுத்தியது அவருடைய வார்த்தை! திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்கியது அவர் கிருபை.

அவர் பாவிகள் மேல் இரக்கம் உள்ள தேவன் . ஞானவான்களின் சாதுரியமான பேச்சுக்கு பதில் தருவது அவருடைய வார்த்தை. இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினவர். அவரே நம்முடைய கன்மலையும் இரட்சகருமானவர். சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுண்டு – நீதிமொழிகள் 18 :24

அவர் சிலுவையில் பலியாகி கரை அமைத்துக் கொண்டார் மரணத்தை ஜெயமாக விழுங்கினார். மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார் அவர் உயிர்த்தெழுந்தார் மரணத்தை ஜெயித்தார். சமாதானத்தின் தேவன் பராக்கிரமம் உள்ளவர் ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தர் அல்பாவும் ஒமெகாவும் அவரே மீட்பர்

யோசுவா இஸ்ரவேல் ஜனங்கள் உண்மையான தேவனை சேவிக்க தவறிய போது ஒரு தெளிவான பதிலை கட்டளையிட்டார். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றான் – யோசுவா 24 : 15

அன்பானவர்களே நாம் விசுவாசம் எங்கே கர்த்தர் நம்மை அழைக்கிறார் நம்மை நாமே தற்பரிசோதனை செய்து கொள்ளும் நேரம் இது.இன்று எப்படி உள்ளோம் . கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

# பெரிய பயங்கரம் எங்கும் திகில் சூழ்ந்துள்ளது

## சகோதரர். ஜான் வர்கீஸ் (கேரளா)



எரேமியா 20 : 1- 3 இந்தியா முழு உலகமும் இன்று கோவில் 19 பயத்தில் பிடிபட்டுள்ளனர். பல லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டும், மரணத்தோடு போராடிக் கொண்டும் இருக்கின்றனர் .அரசாங்க அதிகாரிகள் பல அவசர முடிவுகளை எடுத்து மக்களின் வாழ்வை காப்பாற்ற முற்பட்டு கொண்டிருக்கின்றனர்.

எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் புறப்படுவதற்கு முன்பு பல வாதைகளால் பார்வோனின் இருதயம் கடினப்பட்டது.அவனுடைய தேசத்தின் மந்திரவாதிகளாலும் வாதையை கட்டுப்படுத்தகூடாமல் யாத் 8 : 19 ல் அவர்கள் இது தேவனுடைய விரல் என்றார்கள். அதுபோலவே நோவாவின் நாட்களிலும் (ஆதி 6 : 5,6) பெருமழை ஜனங்களை அழித்தது.எசேக் 16 : 49 ல் சோதோமின் அக்கிரமத்திற்காக அது அழிக்கப்பட்டதை கர்த்தர் குறிப்பிட்டிருக்கிறார்.
லூக் 17 : 26-30 ல் நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும் என்று கர்த்தர் உரைக்கிறார். ஆகவே இன்று நம் இருதயம் தேவசிந்தனையுடையதாய் மாற வேண்டும். அவருடைய நியாயத்தீர்ப்புக்காக காத்திருப்போம்.

# கடினமான அனுபவங்கள்

**ஆயர்.W.S.வேதா (இந்தியா)**



எனது அறுபத்து ஐந்து வருட அனுபவத்தில் இத்தனை நாட்கள் ஊரடங்கு நீடித்ததை பார்த்ததும் இல்லை.கேட்டதும் இல்லை. இரண்டாம் உலகப்போர் சமயங்களில் ஜப்பான்காரன் விமானம் மூலம் குண்டுபோடும்போது மக்கள் பதுங்கு குழிகளிலும், வீடுகளிலும் பல நாட்கள் வெளியே வராமல் இருந்துள்ளதை கேட்டுள்ளேன், படித்துள்ளேன் (மத்தேயு 24:36).

கட்டுப்படுத்த முடியாத கலாட்டாக்கள் போராட்டங்கள் நடைபெறும்போது அரசாங்கம் நூற்று நாற்பத்து நான்கு தடை உத்தரவு பிறப்பிப்பதுண்டு.ஆனால் அவை மூன்று நாட்களோ அல்லது ஒரு வாரமோ மட்டுமே நீடிப்பதுண்டு.

இம்முறை ஏறத்தாழ எழுபத்திரண்டு நாட்கள் ஊரடங்கு வரலாறு காணாத ஒன்றாகும்.எங்கள் விசுவாசிகள் பெரும்பாலானோர் நிரந்தர பணியாளர்கள் அல்ல, எனவே, வேலை இழந்த அவர்களுக்கு இருமுறை அரிசி மற்றும் மளிகை சாமான்கள் இலவசமாக வழங்க கர்த்தர் கிருபை செய்தார்.

ஏராளமான சுயாதீன சபை ஊழியர்களுக்கு காணிக்கைகள் அனுப்பி தாங்கவும் கர்த்தர் உதவி செய்தார்.ஒரு காலத்தில் மற்றவர்களின் உதவியை நாடி நின்ற நிலையினை மாற்றி மற்றவர்களுக்கு உதவிசெய்யும்படி தேவன் எங்களை தகுதிப்படுத்தி இருந்தார்.

வேலை இழந்தவர்களுக்கும், சபைக்காணிக்கை இழந்தவர்களுக்கும் உதவி செய்தோம்.இந்த உதவிகளை செய்யும்படி ஒத்தாசை செய்த நண்பர்களுக்கு புகைப்படங்களை அனுப்ப, போட்டோ எடுப்பதுண்டு.சில ஊழியர்கள் இதனைப் பெரிதுபடுத்தி பிரச்சனை ஆக்குவது, உதவிசெய்வோரின் மனநிலையை சங்கடத்திற்குள்ளாக்குகிறது. உதவி செய்கின்றவர்கள் முடிந்த அளவு உதவி பெறுவோரின் புகைப்படங்களை தேவையில்லாமல் வாட்சப்பிலும், பேஸ்புக்கிலும் வெளியிடாமல் இருப்பது நல்லது.கர்த்தர் இந்த கடினமான நாட்களில் பயமின்றி வாழ உதவி செய்வாராக - 2 தீமோ 1 : 7

## பயமின்றி விசுவாசிப்போம்

# நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்

**மேய்ப்பர் : பிலிப்ஸ் (கலிபோர்னியா, அமெரிக்கா )**



உலகத்தின் தற்போதைய நிலை குறித்து நீங்கள் நினைப்பது என்ன? என்னை சுற்றியுள்ள ஜனங்களின் சூழ்நிலையை கவனித்தேன் அநேகர் திகிலடைந்து காணப்படுகின்றனர். சிலர் காரணமின்றி கவலைப்படுகின்றனர். ஒரு கிறிஸ்தவராக உங்களுடைய கருத்து என்ன சமாதானமாக உணர்கிறீர்களா? அமைதியான சூழ்நிலையை உணர முடிகிறதா ?

நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் உலகமே பாதிக்கப்பட்டாலும் கர்த்தர் நம்மை உயிரோடு காப்பார். இது பயப்படும் நேரம் அல்ல ஆவிக்குரிய வளர்ச்சி காண தருணம். உண்மையான நட்பின் வலிமையை உணரக்கூடிய நேரம் பயத்தை புறம்பே தள்ளும்

தேவனின் விலையேறப்பெற்ற அன்பை உணரும் நேரம். எல்லாம் வல்ல கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தங்களை அருளி இருக்கிறார் .அவருடைய வார்த்தைக்கு செவி சாயுங்கள். உங்கள் விசுவாசம் எங்கே. உங்கள் நம்பிக்கை எங்கே. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள். எதின் மேல் கட்டப்பட்டிருக்கிறீர்கள். இன்னலில் சிக்கியுள்ள இந்த நாட்கள் தேவனோடு நிற்க தேவனுடைய வெளிச்சத்திலேயே நடக்க முயற்சிப்போம்.

இப்போது உங்களுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை நினைவுபடுத்துகிறேன் தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையும் மகிமையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சேனைகளின் கர்த்தாவே உம்மை நம்பி இருக்கிற மனுஷன் பாக்கியவான் - சங்கீதம் 84 : 11, 12.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

# சமூக இடைவெளி அல்லது ஆவிக்குரிய ஒரு மனம்/ இணைப்பு



சமூக இடைவெளி என்கிற இந்த வார்த்தை இன்று நாம் பலமுறை உபயோகப்படுத்துகிறோம். மாம்சீகமான இடைவெளியை சமூக நலன் கருதி (6 அடி) கொரொனா வைரஸ் பரவலை தடுக்க மேற்கொள்கிறோம். ஜனங்கள் கூட்டம் கூடுவதை தடுக்கும் பொருட்டு இன்று வியாபாரங்கள் முடக்கப்பட்டு பள்ளி கல்லூரிகளும் செயல்படாமல் இருக்கிறது. ஆகவே ஜனங்கள் இன்று தங்களுடைய வீடுகளில் மற்றவர்களோடு அதிக தொடர்பின்றி , சபை ஐக்கியக் கூடுகைகளின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதுதான் ஆவிக்குரிய இணைப்பிற்கு ஏற்ற தருணம். முதலாவது தேவனோடு உள்ள உங்கள் ஒவ்வொருவரது உறவை வலுப்படுத்திக் கொள்ளுங்கள் .

இரண்டாவது உங்கள் நண்பர்களை நேரில் சந்திக்க முடியாத இந்த நாட்களில் தினமும் அவர்களுக்கு ஆவிக்குரிய சுவிசேஷ சத்தியங்கள் குறித்த குறுஞ்செய்திகளை பகிர்தல், சமூக வலைத்தளங்களை உபயோகப்படுத்தி தேவ செய்திகளை அனுப்புதல் என உங்கள் நண்பர்களுக்கு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துங்கள். இன்று பல ஜனங்கள் தனிமைப்படுத் தப்பட்டு பயத்தோடு இருக்கின்றனர். அரசாங்கமும் நம்மை சமூக இடைவெளியை கடைபிடிக்க சொல்கிறார்கள். கர்த்தர் ஆவிக்குரிய இணைப்பிற்காக நம்மை அழைக்கிறார். ஆகவே நீங்கள் சுவிசேஷம் அறிவிக்கும்போது யாராவது ஒருவருடைய வாழ்வில் உங்களால் மாற்றத்தை உருவாக்கக்கூடும்.

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## சுருட்டப்பட்ட சீலைகள்

**போதகர் : எட் வில்சன் (ஓக்லகோமா, அமெரிக்கா)**



இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறித்து யோவான் 20: 6-8 ல் சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடப்பதையும் அவருடைய தலையில் சுற்றி இருந்த சீலை மற்ற சீலைகள் உடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். முந்தி கல்லறையினிடத்திற்கு வந்த மற்ற சீஷனும் (யோவான்) உள்ளே பிரவேசித்து கண்டு விசுவாசித்தான்.



அதில் தலையில் சுற்றி இருந்த சீலை தனியே இருந்தது. அச்சணமே இயேசு தாங்கள் அனைவருக்கும் வெளிப்படுத்திக் காட்டியதை யோவான் விளங்கிக் கொண்டார். அவருடைய சரீரம் அவசரமாக இங்கிருந்து எடுத்துச் செல்லப்படவில்லை . இது எதிரிகளின் சூழ்ச்சி அல்ல. தாம் நேசித்த அன்புக் குரியவரின் மரணத்தை மறுக்கும் ஆறுதலை தேடி மீண்டும் அந்த இடத்திலேயே நிற்கிறார் யோவான்.தம்மோடு கூட இருக்கும் இயேசுவால் நேசிக்கப்பட்ட அவருடைய சிநேகிதர்கள் அவருடைய சரீரத்தை சீலைகளின்றி வெளியே எடுத்துச் சென்று அவரை கனவீனப்படுத்த வாய்ப்பே இல்லை.

ஒருவேளை அவர் உயிரோடு இருக்கும் போது வெகு சமீப நாட்களுக்கு முன்பாக மரித்த லாசருவின் கைகளையும் கால்களையும் கட்டி இருந்த சீலையை அகற்றி உயிரோடு எழுப்பினாரே அந்த லாசரு இயேசு கிறிஸ்துவை எடுத்து சென்று இருப்பாரோ? வெறுமனே மயக்கமடைந்த ஒரு மனிதனைப் போல நினைவு திரும்பி ஆபத்தை உணர்ந்து அவர் வெளியே செல்லவில்லை. மரணத்தை ஜெயித்து கெம்பீரமாக அமைதியாக பிதாவின் சித்தம் நிறைவேற்றும் விதமாக பரிசேயர்கள் மற்றும் போர்ச்சேவகர்கள் குறித்த எந்த ஒரு கலக்கம் இன்றி மகிமையாய் அவர் உயிரோடு எழும்பி மரணத்தை ஜெயமாக விழுங்கினார்.யோவானின் விசுவாசம் இவைகளை உள்ளடக்கியது. விசுவாசப் பாதையில் முன்னோக்கி சென்று தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு இவைகளை நாம் விசுவாசிக்க யோவான் இதை எழுதி வைத்துள்ளார் ஆமென்.

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi-Taluk - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with us on Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316